கட்சித்தாவல் தடைச் சட்டமும், 'ஆயா ராம் காயா ராம்' கட்சி மாறிகளும்!

அரசியல் கட்சிகளின் நேர்மை மற்றும் ஒழுக்கத்தைப் பேணுவதற்குச், சட்ட மீறல் செய்த உறுப்பினரைத் தகுதி நீக்கம் செய்வதற்கான முடிவு மிக முக்கியமானது என்று தான் 1985 ஆம் ஆண்டு 52 ஆவது திருத்தச் சட்டம் மூலம் கட்சித் தாவல் தடைச் சட்டம் அரசியல் அமைப்புச் சட்டத் திருத்தமாக 10 ஆவது அட்டவணையில் சேர்க்கப்பட்டது. சட்டமன்ற உறுப்பினர்கள் தனிப்பட்ட ஆதாயத் திற்காகக் கட்சி மாறுவதைத் தடுக்க; பாராளுமன்றத்திற்கும் மற்றும் மாநில சட்டமன்றங்களுக்கும் இது பொருந்தும். இச் சட்டத்தின் படி ஓர் உறுப்பினர் தானாக முன்வந்து கட்சியின் உறுப்பினர் பதவியைத் துறந்ததற்காக, எதிராக வாக்களித்ததற்காக, தகுதி நீக்கம் செய்யப்படுவார். மக்களவையின் தலைவர், மாநில சட்டமன்ற அவைத் தலைவர்களுக்கு நீக்கம் தொடர்பான வழக்குகளில் முடிவு எடுக்கும் அதிகாரம் உள்ளது எனச் சட்டம் சொல்லுகிறது.

*தற்போதைய கட்சித் தாவல் தடைச் சட்டம் பற்றி அரசியல் வாதிகள், சட்ட வல்லுநர்கள், ஏன்; நீதிபதிகள் மத்தியில் கூட இன்றளவும் சில, பல விமர்சனங்கள் உண்டு (Criticism of the AntiDefection Law). அதாவது மாற்றுக் கருத்தை அல்லது எதிர்ப்பைக் கட்டுப்படுத்துதல் (Curb on Dissent), உள்ளது. கட்சிச் சார்புடையவர் என்பதால் தீர்ப்பில் அவைத் தலைவரின் மனச்சாய்வு (Speaker's Bias) அடங்கியுள்ளது. தீர்ப்பு வழங்க குறிப்பிட்ட கால வரம்பு இல்லை (No fixed time limit), குதிரை பேரம் நடத்தும் வாய்ப்பு (Horse trading) இருக்கிறது, கட்சிக் கொறடா உத்தரவுகளில் வெளிப்படைத் தன்மை இல்லாமை (Lack of transparency in whips) என இப்படியான குறைபாடுகள் உள்ளன.

*இந்திய வரலாற்றில் கூட்டணி அமைத்துத் தேர்தலைச் சந்தித்த பிறகு, உடனடியாகக் குறுகிய காலத்திற்குள் எதிரணிக்குத் தாவித் துரோகம் இழைத்த சம்பவங்கள் பல நிகழ்ந்துள்ளன. ஜனநாயகத்தைக் கேலிக் கூத்தாக்கும் விதத்தில்; கட்சித் தாவல்கள் மற்றும் முதுகில் குத்தும் புரூட்டஸ் கூட்டணித் துரோக நிகழ்வுகள் தொடர்கின்றன. இந்திய அரசியலில் சுயநலத்திற்காக இப்படி அடிக்கடிக் கட்சி மாறும் அரசியல்வாதிகளைப் பற்றிப், புகழ்பெற்ற' சொற்றொடரான "ஆயா ராம், காயா ராம் (Aaya Ram Gaya Ram) என்று கட்சி தாவும் நபர்களைக் குறிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

ஏன் கட்சித் தாவல் தடைச் சட்டம் விமர்சனத்திற்கு உள்ளாகியுள்ளது? எதிர்ப்புக் குரலை அடக்குகிறது. கட்சிக் குள்ளான ஜனநாயக இன்மையைப் பேச மறுக்கிறது கட்சிகளின் பிளவுகளை ஆதரிப்பதோடு, சீர்குலைவு நடவடிக்கைகளுக்கு ஊக்கமளிக்கிறது. சபாநாயகரின் சர்ச்சைக்குரிய மனச்சாய்வு பங்கு பெற இடைமளிக்கிறது.

தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டமன்றத் தேர்தலில் த.வெ.க. 108 இடங்களில் தான் வெற்றி பெற்றிருந்தது. அதில் இரு தொகுதிகளில் போட்டியிட்டு ஜோசப் விஜய் வெற்றி பெற்றதால் 107 தொகுதியாகக் கருதப்பட்டது. ஆட்சி அமைக்க போதிய 118 சட்டமன்ற உறுப்பினர்கள் ஆதரவு இல்லாததால், திமுக கூட்டணியில் இடம் பெற்று தேர்தலில் வெற்றி பெற்றிருந்த காங்கிரஸ், விடுதலைச் சிறுத்தைகள், வலது, இடது கம்யூனிஸ்டுகள், இந்திய தேசிய முஸ்லிம் லீக் ஆகிய கட்சிகள் ஆதரவுடன் ஜோசப் விஜய் ஆட்சி அமைத்தார் . கடந்த மே மாதம் 13 அன்று தமிழக சட்டமன்றத்தில் த. வெ.க.அரசு நம்பிக்கை கோரும் வாக்கெடுப்பு நடத்தியது. அப்போது 47 சட்டமன்ற உறுப்பினர்கள் கொண்ட அ.தி.மு.க.வை சேர்ந்த எஸ்.பி. வேலுமணி, சி.வி.சண்முகம் தலைமையில் 25 சட்டமன்ற உறுப்பினர்கள் கட்சியின் பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமியின் முடிவுக்கு எதிராகவும், சட்டமன்றக் கொறடா அக்ரி கிருஷ்ணமூர்த்தியின் உத்தரவை மீறியும், ஜோசப் விஜய் அரசுக்கு ஆதரவு தெரிவித்து வாக்களித்தனர். 144 எம்.எல்.ஏ.க்கள் ஜோசப் விஜய் தலைமையிலான த.வெ.க. அரசுக்கு ஆதரவாக வாக்களித்ததால்,தனது பெரும்பான்மையை நிரூபித்தார் எனச் சட்டமன்ற அவைத் தலைவர் ஜே .சி. டி. பிரபாகர் அறிவிப்பு செய்தார்.

அ.தி.மு.க. கட்சியின் தலைமை கட்டளையை மீறி, விஜய் அரசுக்கு ஆதரவு தெரிவித்த 25 எம்.எல்.ஏ.க்கள் மீது பதவி பறிப்பு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று எடப்பாடி பழனிச்சாமி தரப்பில் சபாநாயகர் இடம் புகார் அளிக்கப்பட்டது. த.வெ.க.வுக்கு ஆதரவு கொடுத்த அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களுக்கு அமைச்சர் பதவி வழங்கப்படும் என்று குதிரை பேரம் நடத்தி, முதல்வர் விஜய் தரப்பில் இருந்து உறுதிமொழி அளிக்கப்பட்டது என்றும், ஆனால் மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை இல்லாததால் த.வெ.க.வுக்கு அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் ஆதரவு கொடுத்ததால், அவர்களது எம்.எல்.ஏ. பதவி பறிபோகும் அபாயம் ஏற்பட்டது. இதை அடுத்து த.வெ.கவிடம் இனி அமைச்சர் பதவி கிடைக்க வாய்ப்பில்லை எனப் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி இடம் 25 எம்.எல்.ஏ.க்களும் சரணாகதி அடைந்தனர். அதை அடுத்து அதற்கான மன்னிப்புக் கடிதத்தை சபாநாயகரிடம் கொடுத்தார். இதற்கு இடையில் விரக்தி அடைந்த அ.தி.மு.க. எம்.எல்.ஏக்கள் ஜெயக்குமார் (பெருந்துறை) மரகதம் குமாரவேல் (மதுராந்தகம்) இசக்கி சுப்பையா (அம்பா சமுத்திரம்) சத்தியபாமா (குராபுரம்) ஆகிய 4 பேரும் தங்கள் எம்.எல்.ஏ. பதவி ராஜினாமா செய்துவிட்டு, த.வெ.க.வில் இணைந்தனர்.

இந்நிலையில், அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி மே 27இல் அளித்துள்ள நான்கு கடிதங்கள் அடிப்படையில், 21 சட்டமன்ற உறுப்பினர்களது மன்னிப்புக் கோரிக்கையை ஏற்று, அவர்கள் மீது தகுதி நீக்க மேல் நடவடிக்கை தேவையில்லை எனக் கைவிடுவதாகவும் கடந்த ஜூன் 9 அன்று அவைத்தலைவர் ஜே.சி. டி. பிரபாகர் அறிவித்தார். எனினும் பதவியை ராஜினாமா செய்த நான்கு சட்டமன்ற உறுப்பினர்கள் மீது தகுதி நீக்க நடவடிக்கை குறித்து பின்னர் அறிவிக்கப்படும் என்று கூறியுள்ளார்.

அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் அக்ரிகிருஷ்ணமூர்த்தி தலைமையில் ஏற்கெனவே தமிழக ஆளுநரிடம் மே 30 அன்று சந்தித்து குதிரை பேரம் நடத்திய ஜோசப் விஜய் அரசு மீது சி.பி.ஐ. விசாரணை வேண்டுமென்று மனு அளித்திருந்தனர். தற்போது 21 அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் மன்னிக்கப்பட்டதால், பதவியை ராஜினாமா செய்து த.வெ.க.வில் சேர்ந்த நான்கு சட்டமன்ற உறுப்பினர்கள் மீது பதவி இழப்புக்கு உள்ளாக்கப்பட வேண்டும் என்று அ.தி.மு.க. தலைமை கூறியுள்ளது.

அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி கோரிய கொறடா உத்தரவை மீறிய எம்.எல்.ஏ.க்கள் மீது தகுதி நீக்க நடவடிக்கை நிலுவையில் இருக்கும் போது, அ.தி.மு.க.வின் 4 எம்.எல்.ஏ.க்களின் இராஜினாமா கடிதங்களை ஏற்று அரசிதழில் வெளியிட்டது செல்லாது எனவும், அதனை ரத்து செய்யக் கோரியும், இராஜினாமா செய்த நான்கு பேரும் த.வெ. க.வில் இணைந்தது எப்படிச் செல்லும்? என்றும், இது கட்சித் தாவல் தடைச் சட்டத்தை நீர்த்துப் போகச் செய்யும் வகையில் அமைந்து உள்ளதாகவும்; ஆகவே, தகுதி நீக்கம் செய்யக் கூடிய மனுக்களை விசாரித்து முடிவெடுக்க சபாநாயகருக்கு உத்தரவிட வேண்டும் எனக் கோரி சென்னை உயர் நீதிமன்றத்தில் தேசிய மக்கள் சக்தி கட்சித் தலைவர் எம்.எல்.இரவி வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இதற்கு இடையில் 4 அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்கள் ராஜினாமா செய்த சட்டமன்றத் தொகுதிகளுக்கு இடைத் தேர்தல் நடத்தத் தடை கோரி அ.தி.மு.க. உயர் நீதிமன்றத்தில் வழக்கு போட்டு உள்ளது

தி.மு.க. தலைவர் தளபதி மு.க.ஸ்டாலின் தனது வலைத்தளப் பதிவில் "நம்பிக்கை வாக்கெடுப்பின்போது, ஆட்சி தக்க வைக்க அ.தி.மு.க.வின் ஒரு அணியை ஆதரவாக வாக்களிக்க, விலை பேசியதுடன், அ.ம. மு.க உறுப்பினர்ஒருவரைக்கொசுறாகவாங்கியது. அ.தி.மு.க.விலிருந்து உறுப்பினர்கள் சிலரை விலக வைத்து, தலைமைச் செயலகத்திலேயே இணைத்துக்கொண்டது. இந்தக் கண்றாவிக் காட்சிகளையும் பார்க்க வேண்டித்தான் மக்கள் வாக்களித்தார்களா? தங்களைத் "தூய சக்தி என்று சுயத் தம்பட்டம் அடித்தவர்கள், தற்போது "துயரச் சக்தி என்று அம்பலப்படுத்திக் கொண்டிருக்கிறார்கள். குதிரை வேகத்தில் குதிரை பேர ஆட்சி நடக்கிறது. அ.தி.மு.க. எம்.எல்.ஏ.க்களை முதல்வர் விஜய் "ஷாப்பிங் செய்து கொண்டிருக்கிறார் . பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் எப்படிக் குதிரை பேரம் நடத்தி மாற்றுக் கட்சி எம்எல்ஏக்களை விலைக்கி வாங்கி ஆட்சியைப் பிடிக்கிறதோ; அதே பாணியைத்தான் த.வெ.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் எடுத்து வைத்துள்ளார்.

வாக்கெடுப்பின் போது குதிரை மற்றும் மைனாரிட்டி அரசு என்று கடுமையாக குற்றம் சாட்டிப் பேசினார் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின். த.வெ.க. அரசு சொகுசு சோபா செட்டுகளையும், பிற சலுகைகளையும் இலஞ்சமாக கொடுத்து, சோபா மாடல் (Sofa Model) ஆட்சி நடத்துகின்ற இது ஒரு மைனாரிட்டி அரசு என்று கடுமையாக சட்டமன்றத்தில் விமர்சனம் செய்தார்.

கவிஞர் தமிழ்தாசன்
தி.மு.க. தீர்மானக் குழுத் தலைவர்

மந்திரி பதவி, நிதி ஆதாயம் கருதி அ.தி.மு.க.வின் 25 சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் டி.டி.வி தினகரனின் அ.ம.மு.க கட்சியின் காமராஜ் போன்றோர் குதிரை பேரம் நடத்திய த.வெ.க . அரசு, டி.டி.வி. தினகரன் கட்சி அ.ம.மு.க.வின் எம்.எல்.ஏ காமராஜ் இன் வாக்களிப்பும் சட்ட விரோதமானவை. 25 பேர் கட்சித்தாவல் தடைச் சட்டத்தின் படி நடவடிக்கை எடுக்க வேண்டிய நபர்களாவர். ஆனால், அதில் 21 பேர் தந்த மன்னிப்புக் கடிதம் ஏற்று அவைத்தலைவரிடம் 15 நாள்களில் வழங்கியதால், அவர்கள் தகுதி நீக்கத்திலிருந்து தப்பித்துள்ளனர். எனினும், மீதமுள்ள நான்கு பேர் கட்சியின் தலைமை, கொறடா உத்தரவை மீறி வாக்களித்து இந்த எம்எல்ஏக்கள் மீது தகுதி நீக்கத்திற்கு உள்ளாக்கப்பட வேண்டும். அது போல் அ.ம.மு.க. வில் இருந்து வாக்களித்துவிட்டு பின்னர் நீக்கப்பட்ட சுயேச்சையாக செயல்படும் காமராஜ் சட்டமன்ற உறுப்பினர் பதவியையும் பறிக்கப்பட வேண்டும் என்பதுதான் சட்டம்.

உச்ச நீதிமன்றம் அளித்த இராஜா ராம் பால் (Raja Ram Pal) வழக்கின் தீர்ப்பை மேற்கோள் காட்டி மூத்த வழக்கறிஞர் வில்சன் எம்.பி. இது போன்ற பணப் பரிமாற்ற புகார்களை விசாரிக்க அவைத் தலைவர் உடனே ஒரு குழுவை அமைத்திருக்க வேண்டும் என்று குற்றச் சாட்டை எழுப்பியுள்ளார்.

அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடிக்கு மட்டுமே கட்சியின் கொறடாவை நியமிக்கும் அதிகாரம் உள்ளது. கட்சித் தலைமையின் உத்தரவுக்கு மாறாக, அரசுக்கு ஆதரவாக வாக்களித்த சட்டமன்ற உறுப்பினர்களது பதவியை பறிப்பது தான் முறையாகும். ஆனால் அதற்கு மாறாகக் குதிரை பேரம் நடத்தியது மிகப்பெரிய குற்றச் செயலாகும். 1993இல் நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் ஜார்க்கண்ட் முக்தி மோர்சா கட்சி எம்பிக்களிடம் குதிரை பேரம் நடத்தி,அந்த எம்பிக்கள் ஆதரவைப் பெற்ற காங்கிரஸ் கட்சியின் தலைவர் இந்தியப் பிரதமர் நரசிம்மராவ் மற்றும் பூட்டாசிங் ஆகியோர் மீது சி.பி.ஐ. வழக்கு பதிவு செய்தது. அது போல், ஜோசப் விஜய் யின் அரசு மீது சிபிஐ வழக்கு பதிவு செய்ய முடியும். அதற்கான காரணங்கள் வலுவாக உள்ளன. ஆளுநரிடம் அளித்த மனு வேலை செய்ய வேண்டும்.

சட்டப்பேரவையில் நடைபெற்ற நம்பிக்கை வாக்கெடுப்பின்போது, கட்சியின் அதிகாரப்பூர்வ கொறடா வழங்கும் உத்தரவு மீறி வாக்களித்தாலோ அல்லது வாக்கெடுப்பை புறக்கணித்தாலோ அவர்கள் உடனடியாக தகுதி நீக்கம் செய்யப்பட வாய்ப்பு உள்ளது என்று உச்ச நீதிமன்றம் ஏற்கனவே சுட்டிக்காட்டி மராட்டிய சிவசேனா வழக்கில் தீர்ப்பு வழங்கி உள்ளது. தனி அணி செல்லாது என்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் தாங்களாகவே ஒன்று கூடி ஒரு புதிய கொறடாவை நியமிக்க முடியாது; அது சட்டப்படி தவறானது; தலைமையே முடிவு செய்யும் அக்கட்சியின் அதிகாரப்பூர்வ தலைமை யாரை கொறடாவாக நியமிக்கிறதோ அவரே இறுதியானவர். அரசியல் கட்சி எதிர் சட்டமன்றக் கட்சி என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் அரசியல் கட்சியே உயர்ந்தது எனத் தீர்ப்பு சொல்லியுள்ளது. தலைமை எடுக்கும் முடிவே சட்டப்படி செல்லும் என தீர்ப்பு சொல்லியுள்ளது. மராட்டிய சிவசேனா ஏக்நாத் சிண்டே மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் இருந்தார்கள் எனினும் அங்கிகாரம் இல்லை எனில், அவர் தனியாக அறிவித்த கொறடா நியமனம் செல்லாது என உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

எனவே, பிரிந்து செல்லுதல் மற்றும் இணைத்தல் என்ற பிரிவில் பல பிரச்சினைகள் இருப்பதால்; 2004 ஜனவரி ஒன்றாம் தேதி அன்று அரசியலமைப்புச் சட்டம் திருத்தத்தில் அந்தப் பிரிவு முற்றிலும் நீக்கப்பட்டு விட்டது. இணைத்தல் மட்டுமே தற்போது உள்ளது. அதன் படி ஒரு அரசியல் கட்சி மற்றொரு கட்சியுடன் இணையும் போது, அந்த கட்சியின் உறுப்பினர்களின் மூன்றில் இரண்டு பங்கு உறுப்பினர்கள் அதற்கு ஒப்புதல் தர வேண்டும். இந்தப் பிரிவின் அடிப்படையில் அடிக்கடி கட்சி மாற்றம் நடைபெறுவதால் குறைபாடுகள் இந்தப் பிரிவில் உள்ளது அரசியல் கட்சி என்பது தேர்தல் ஆணையத்தில் பதிவு செய்யப்பட்டுக் கட்சி சட்டத் திட்டங்களின் படி சட்டப்பேரவைக்கு வெளியே இயங்குவது; நிர்வகிப்பது; சட்டப்பேரவைகள் அந்த கட்சியின் உறுப்பினர்கள் 2/3 பங்கு உறுப்பினர்கள் சேர்ந்து மற்றொரு கட்சியுடன் இணைய விரும்பினால் மட்டுமே, இணைப்பு நடைபெறும். இது அண்மையில் சுபாஷ் தேசாய் என்பவர் மராட்டியத்தில் மாநில ஆளுநருக்கு எதிராகத் தொடரப்பட்ட வழக்கில் உறுதி செய்யப்பட்டுள்ளது.

கட்சியின் ஒப்புதல் இன்றி அவைக்குள் பெரும்பான்மை அடிப்படையில் கட்சிகளின் இணைப்பை ஏற்றுக் கொண்டால்; அது பெரிய அளவிலான கட்சித் தாவலை உருவாக்குவதுடன், அரசியல் சந்தர்ப்பவாதத்தை ஊக்கிவிக்கிறது. இது போன்ற சூழல்களில் அவைத்தலைவர் ஊக்குவித்து அங்கீகரித்தால் அது பத்தாவது அட்டவணையின் மதிப்பு குறைந்துவிடும் உண்மையான கட்சி எது? அந்தக் கட்சி இணைப்புக்குத் தயாராக உள்ளதா? அந்தக் கட்சியின் சின்னம் யாரிடம் உள்ளது? என்பதை ஆய்வு செய்து செயல்படும் "அரசியல் அமைப்புத் தீர்ப்பாயம் தான் அவைத் தலைவர் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும். வாக்களித்த மக்களின் நம்பிக்கைக்கு துரோகம் செய்யக்கூடாது என அரசிடம் சட்டம் பத்தாவது அட்டவணை கூறுகிறது.

மூத்த வழக்கறிஞர் இராஜகோபால் என்பவர் "உச்ச நீதிமன்ற தீர்ப்பின்படி அரசியலமைப்பின் 10 ஆவது அட்டவணையையும், வாக்காளர்களின் நம்பிக்கையையும் பாதுகாப்பது மிக அவசியமாக உள்ளது. ஆகவே, வாக்காளர்களின் நம்பிக்கையை பாதுகாப்பது முக்கியமும், அவசியமும் ஆகும். அவைக்குள் கட்சித் தாவலை அவை தலைவரே ஊக்கப்படுத்திவிடக் கூடாது என்று கூறுகிறார்.

இந்தியாவில் கட்சித் தாவல் தடைச் சட்டம் பத்தாவது அட்டவணை தொடர்பாக உச்ச நீதிமன்றம் வழங்கிய மிக முக்கியமான மற்றும் வழிகாட்டுதலான தீர்ப்புகள் பல்வேறு வழக்குகளில் கூறப்பட்டுள்ளன. கிஹோட்டா ஹொல்லாஹன் வழக்கு 1992 இல் "சபாநாயகர் ஒரு தீர்ப்பாயமாகச் செயல்படுவதால், அவர் முடிவுகள் நீதித் துறை மறு ஆய்வுக்கு உட்பட்டது (Judicial Review) எனத் தீர்ப்பளித்தது.

ரவி எஸ். நாயக்கர் வழக்கு: (Ravi S. Naik versus Union of India 1994) ஒரு உறுப்பினர் தனது கட்சியில் இருந்து சுய விருப்பத்துடன் வெளியேறுகிறார் என்பதற்கு அவரது வெளிப்படையான நடவடிக்கைகள் மற்றும் செயல்பாடுகளை போதுமானவை அதற்கு முறையான ராஜினாமா கடிதம் தேவையில்லை என்பதைத் தெளிவுபடுத்தியது.

கேஷம் மௌச்சந்திரா சிங் வழக்கு: (Keishan Megha Chandra SinghVSpeaker 2020) இவ்வழக்கில் தகுதி நீக்கம் குறித்து சபாநாயகர் காலவரையின்றி நிலுவையில் வைப்பது என்பதை உச்ச நீதிமன்றம் கடுமையாக சாடியது. இது போன்ற வழக்குகளில் சிறப்பு சூழ் நிலைகளைத் தவிர மூன்று மாதங்களுக்குள் முடிவெடுக்க வேண்டும் என்று வழிகாட்டுதல்களை வழங்கியது.

பாடி கவுசிகிரட்டி வழக்கு: (Padi Kaushik Reddy Vs The state of Telungana 2025) தெலுங்கானாவில் பி.ஆர்.எஸ்.10 எம்எல்ஏக்கள் காங்கிரசுக்குத் தாவிய விவகார வழக்கில், சபாநாயகர் உரிய காலத்தில் நடவடிக்கை எடுக்காமல் காலதாமதம் செய்து முடக்கம் செய்தார். அதனை உச்சநீதிமன்றம் கண்டித்தது. சபாநாயகர் நாடாளுமன்ற, சட்டமன்றத்தின் சிறப்பு உரிமையின்கீழ் , உறுப்புகள் (122/ 212) சட்டபூர்வமான, முழுமையான பாதுகாப்பைப் பெற முடியாது எனத் திட்டவட்டமாகக் கூறியதுடன் மூன்று மாத காலக்கெடுவுக்குள் முடிவு எடுக்க உத்தரவிட்டது. கால தாமதம் படுத்தும் சபாநாயகருக்கு அரசியல் அமைப்பு சட்டம் பாதுகாப்பு கிடையாது என கண்டிப்பு செய்தது. "Operation successful; but patient died அறுவைச் சிகிச்சை வெற்றி; ஆனால் நோயாளி மரணம்! என்ற நிலைமையை ஏற்க முடியாது என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

கியோ மின்ட் லவ் ஜோங் எதிர் சபாநாயகர், மணிப்பூர் 2020 வழக்கில்" கட்சித் தாவல் தடைச் சட்டத்தின் கீழ் தகுதி நீக்கம் செய்ய சபாநாயகர் காலவரையின்றித் தாமதம் செய்யக்கூடாது. தகுதி நீக்க மனுக்கள் மீது நியாயமான காலத்திற்குள் குறிப்பாக மூன்று மாதத்திற்குள் சபாநாயகர் இறுதி முடிவு எடுக்க வேண்டும் என்று கண்டிப்பு காட்டி உத்தரவு பிறப்பித்தது.

சுபாஷ் தேஜாய் எதிர் மகாராஷ்டிரா ஆளுநர் 2023: வழக்கில் மராட்டியத்தில் சிவசேனா கட்சிக்குள் பிளவு மற்றும் ஆட்சி மாற்றத்தின் போது, உச்ச நீதிமன்றம் இந்த வழக்கை விசாரித்தது. கட்சித் தலைவருக்கும், சட்டமன்ற தலைவருக்கும் இடையேயான அதிகாரம் எல்லை மற்றும் சபாநாயகர் செயல்பாடுகள் குறித்து அரசியல் சாசன அமர்வு முக்கிய விளக்கங்களை அளித்தது. நீதிமன்ற அதிகார வரம்பு பற்றி கூறும்போது, சபாநாயகர்கள் கட்சித் தாவல் புகார்கள் மீது முடிவு எடுக்கும் போது, அரசியல் சாசனத்தின் படிச் சுதந்திரமாகச் செயல்பட வேண்டும்; அவருடைய முடிவுகள் பாரபட்சமாக இருக்கும் பட்சத்தில், நீதிமன்றங்கள் அதில் தலையிட்டுத் தீர்வோ வழங்க முடியும்.

இதுபோன்று பல்வேறு வழக்குகளில் சட்டமன்ற அவைத் தலைவரின் காலதாமத முடிவுகள் சட்டத் தவறான முடிவுகள் போன்றவற்றைக் கண்டித்து உச்சநீதிமன்றம் கண்டித்து கடுமையான உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளது. ஆகவே, சட்டமன்றத்தில் நடந்துள்ள கட்சித் தாவல் முறைகேடுகளையும், ஜோசப் விஜய் அரசின் குதிரைப் பேர அரசியலையும் உடனடியாக விசாரித்துத் தீர்ப்புகள் வழங்கப்பட வேண்டும்.

விருத்தாசலம் நகரக் கழக துணைச் செயலாளர்

சந்தானலட்சுமி - சுந்தரமூர்த்தி இல்லத் திருமண விழா!

கே.என்.நேரு – சி.வெ.கணேசன் – பிரேமலதா விஜயகாந்த் தலைமை!

கடலூர் , ஜூன் 18 -

கழகத் தலைவர் மு.க. ஸ்டாலின் கழக இளைஞரணி செயலாளர் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோர் நல்வாழ்த்துக்களுடன் விருத்தாசலம் நகர கழக துணை செயலாளர் சந்தானலட்சுமி கிளைக் கழக செயலாளர் எஸ்.சுந்தர மூர்த்தி ஆகியோரின் மகன் எஸ்.ஏகாம்பரநாதனுக்கும் தேனி மாவட்டம் தேனி ஏ.கந்தசாமி - கலைச்செல்வி ஆகியோரின் மகள் கே. சௌந்தர்யாவுக்கும் திருமணம் இன்று (18.06.2026) வியாழக் கிழமை காலை 7:30 மணிக்கு மேல் பெண்ணாடம் சாலை விருத்தாசலம் கே.எஸ்.ஆர்.எழில் மஹாலில் நடைபெறுகிறது.

இந்த திருமணத்தை கழக முதன்மை செயலாளர் முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு, கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் முன்னாள் அமைச்சர் திட்டக்குடி சட்டமன்ற உறுப்பினர் சி.வெ.கணேசன், தேசிய முற்போக்கு திராவிட கழக தலைவர் விருத்தாசலம் சட்டமன்ற உறுப்பினர் திருமதி பிரேமலதா விஜயகாந்த் ஆகியோர் தலைமையேற்று திருமணத்தை நடத்தி வைத்து மணமக்களை வாழ்த்துகின்றனர்.

விருத்தாசலம் நகர கழக செயலாளர் க.தண்டபாணி வரவேற்புரை ஆற்றுகிறார்.

பாவாடை கோவிந்தசாமி, கனக. கோவிந்தசாமி, தி.வேல்முருகன், சபா. இராசேந்திரன் , டாக்டர்.சங்கவி, முருகதாஸ், எம்.எஸ். கணேஷ்குமார், வி.டி. கலைச்செல்வன், சி.வெ.அண்ணாமலை, எம்.அகர்சந்த், சி.வெ.க.வெங்கடேசன், கோட்டேரி, சுரேஷ், எம்.ஆர். இராதாகிருஷ்ணன் ஆகியோர் முன்னிலையில் வகிக்கின்றனர்.

டாக்டர். நந்தகோபாலகிருஷ்ணன், அரங்க. பாலகிருஷ்ணன், எஸ்.இராமு, பொன்.கணேஷ், இரா.செங்குட்டுவன், எம்.கே. அருள்குமார், எஸ். நம்பிராஜன், வி.ஆர்.மணிகண்டன், ஆட்டோ. பாண்டியன், கு. பழனிச்சாமி, டி. எஸ்.சரவணன், ராணி, தண்டபாணி, தங்க.அன்பழகன், தளபதி குமார், தர்ம.மணிவேல், கே. ரவிச்சந்திரன், ஏ.ஆர்.கதிரவன், எம்.ஏ.பாரி, இப்ராகிம், வி.ஆர். சுப்பிரமணியன், பட்டி.வசந்த், சி.செல்வம் ஜி.சதீஷ்குமார், வை.தட்சிணாமூர்த்தி, சன். அன்பழகன், பி. பாண்டுரங்கன், ஜி.பி.டபுள்யூ. செந்தில் குமார், கே.ஏ. ராஜ்குமார், எம். கே.ரமேஷ், டி. சங்கர், கே.வி. பால முருகன், து.பன்னீர்செல்வம், பி.அறிவுடை நம்பி, வி.தளபதி, குருசரஸ்வதி, ஆ.மூர்த்தி, ஜி.எஸ்.ஆனந்தன், ஜி.எஸ். சுரேஷ், க.கர்ணன், டைலர் சிவா, மெக்கானிக் சரவணன், உதயன், மகேஷ், சத்திய நாராயணன், மொய்தீன், ஷரீப், கே.ஸ்ரீதர், கேஸ்.ரவி, எஸ். வெங்கடேசன், எஸ்.அண்ணா, துரை ஏ.ஆறுமுகம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குகின்றனர்.

விருத்தாசலம் 33 வது வட்ட நிர்வாகிகள் பி. கணேசமூர்த்தி, கு.பன்னீர்செல்வம், பி.முருகன், பி. சரவணன், கே. பாண்டியன், சி.திணேஷ்குமார், டி.ராஜசேகர், டி.பாபு, எம்.ராம்குமார், எஸ். தமிழ்இனியன், எ. தமிழ்செல்வன், கே.வீரக்குமார்,

விருத்தாசலம் நகர மன்ற உறுப்பினர்கள் க.கிருஷ்ணமூர்த்தி, கே.வெங்கடேசன், த.முத் துக்குமரன், ச.சுந்தரி, என். ஜெயலக்ஷ்மி, உஷாபாலு, ஆர். சகிலாபானு, தீபாமாரிமுத்து, எஸ்.அருள்மணி, பி.வசந்தி, எஸ். ராசாத்தி, எம். அறிவழகி, ஜி.கரிமுனிஷா, வை.பக்கிரிசாமி, துரை.அமிர்தலிங்கம் முதியோர் மணமக்களை வாழ்த்துகின்றனர்.

எஸ்.பிரபாகரன் தேவிகலா ஆகியோர் நன்றியுரை ஆற்றுகின்றனர்.

விழுப்புரம் மத்திய மாவட்டக் கழக பொறுப்பாளரும், விழுப்புரம் சட்டமன்ற உறுப்பினருமான டாக்டர் இரா. இலட்சுமணன் வானூர் சட்டமன்ற உறுப்பினர் தி.கௌதம் சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தை திறந்து வைத்தார். உடன் மாவட்டப் பொறுப்புக்குழு உறுப்பினர் A.மாரிமுத்து, பிரேமா குப்புசாமி, நகர கழக செயலாளர் S.S.ஜெயமூர்த்தி, ஒன்றிய கழக செயலாளர்கள் P.K.T.முரளி, இரா.மைதிலி ராஜேந்திரன், கு.செல்வமணி, கிளியனூர் ராஜி, வே.கணேசன், சீனு.செல்வரங்கம், திருவக்கரை பாஸ்கர், ச.புஷ்பராஜ், வி.ஜி.பிரபாகரன், கண்டமங்கலம் ஒன்றிய குழு பெருந்தலைவர் ஆர்.எஸ்.வாசன், வானூர் ஒன்றிய குழு பெருந்தலைவர் உஷா முரளி, தலைமை பொதுக்குழு உறுப்பினர் T.R.இளங்கோவன் மற்றும் நகர, ஒன்றிய பொறுப்புக்குழு உறுப்பினர்கள், மாவட்ட, ஒன்றிய சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், உள்ளாட்சி பிரதிநிதிகள், கிளைச் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

மிசா சி. இராமநாதன்
ஜூன் 18 (2025)



மாணவர் பருவத்திலேயே கழகக் கொள்கையில் ஈடுபாடு கொண்டு பணியாற்ற தொடங்கியவர்.

இரண்டு முறை ஆவுடையார்கோவில் ஒன்றியச் செயலாளராகவும், பொதுக்குழு உறுப்பினராகவும், தலைமைக் கழகத்தில் சட்டதிட்டத் திருத்தக்குழு உறுப்பினராகவும், தீர்மானக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்தவர்.

சென்னை சட்டக்கல்லூரியில் பயிலும் போது சட்டக்கல்லூரி வளாகத்தில் பேரறிஞர் அண்ணா சிலை வைத்திட பாடுபட்டவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றதோடு, நெருக்கடி கால மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு ஓராண்டு சிறை தண்டனை பெற்றவர்.

2025ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் தலைமைக் கழகத்தின் சார்பில் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் 'அண்ணா விருது' வழங்கி சிறப